22.01.2026

அ.வ.எண். 119/2021

வா.சா.1 – திரு. வெங்கடேஷ், த/பெ.நடேசன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.01.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வாதியின் வழக்குரை மற்றும் ஆவணங்களை படித்து பார்த்து அதன் பின்னர் தான் என்னுடைய எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 நான் 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள சங்கதிகளை நான் ஒப்புகொள்கிறேன் என்றால் சரிதான், அதன் விவரங்கள் சரியானது. சில விவரங்கள் கூடுதலாக உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தில், பக்கம் 5ல் வடபுறம் மற்றும் தென்புறம் உள்ள கிணறு பற்றியும் அதில் உள்ள பாகம் பற்றியும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில், பக்கம் 6ல் பூமிக்குண்டான தடங்கள் வழியாக மேற்படி பூமிக்கு வண்டித்தடம், கால்நடை தடம், கனரக வாகனங்கள் வகையறா ஓட்டி வழிநடை நடந்துகொள்ளும், மாமூல் தடபாத்தியம் சகிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தாய்ப்பத்திரத்தில் அது இல்லை.

2. வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு உண்டான மூலப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக நினைவில்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை பார்த்துள்ளேன். வா.சா.ஆ.4 நான் கந்தசாமியிடம் இருந்து கிரயம் பெற்ற பத்திரம் ஆகும். வா.சா.ஆ.4 ல் பக்கம் 7 ல், வழித்தடம் பற்றியும், கிணறு பற்றியும் வா.சா.ஆ.5 ல் உள்ளவாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜோசப் வாங்கிய பூமி என்னுடைய பூமிக்கு கிழபுறமாக உள்ளது என்றால் சரிதான். ஜோசப் பூமிக்கும், எனது பூமிக்கும் இடையே தடம் மற்றும் வாரி, வாய்க்கால் உள்ளது என்றால் நான் 50 செண்ட் கிரயம் பெற்ற போது தடம் மற்றும் வாரி, வாய்க்கால் இல்லை. நான் 20 செண்ட் கிரயம் கொடுத்தபோதும் தடம் மற்றும் வாரி, வாய்க்கால் இல்லை.

3. வா.சா.ஆ.2 அருணாச்சல தேவர் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில், பக்கம் 5 ல், சூலூர் கிராமம், க.ச.எண்.265/1 ல் வாதிகளுக்கு 71 சென்ட் பாகம் உள்ளது பற்றியும், அதற்குண்டான செக்குபந்தி திசைகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் இருந்து நிலத்தின் உரிமை மற்றும் அளவு குறித்து ஆவணத்தை பார்த்து என்னால் தெரிந்து கொள்ளவில்லை. செக்குபந்தியின் நிலத்தன்மை மாறவில்லை. சொத்தின் நில உரிமை மாறியுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில், பக்கம் 2 ல், சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளபடி கிருஷ்ணசாமி எழுதி கொடுத்த பூமி, எனது பூமிக்கும், வாதி பூமிக்கும் அருகருகில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அருணாச்சலதேவர் பூமிக்கு தெற்கில் உள்ளது.

4. நான் 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த பின்னிட்டு வேலி அமைத்தேன். நான், 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த பின்னிட்டு வேலி அமைத்தேன் என்பதை நிரூபிக்கும் விதமாக புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. வடபுறம் உள்ள கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் சரியல்ல, தண்ணீர் உள்ளது. வடபுறம் உள்ள கிணற்றில் மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான். தென்புறம் உள்ள கிணறு தான் பாசனகிணறு என்றும், அதில் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். தென்புறம் உள்ள கிணற்றில், தெற்கு பாகஸ்தர்கள் (வாதி மற்றும் பிரதிவாதிகள்) ஆகியோர்கள் 52 % தண்ணீர் பயன்படுத்தி கொள்ளும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல, வடக்கில் உள்ள பூமியின் உரிமையாளர்களுக்கும் உரிமை உள்ளது. வடக்கில் உள்ள பூமியின் உரிமையாளர்களுக்கும் உரிமை உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு கிரயம் கொடுத்தவருக்கு 2 பாகம் உள்ளது, ஒரு பாகம் தெற்கிலும், மற்றொரு பாகம் வடக்கிலும் உள்ளது. தென்புற கிணற்றுக்கு இரு பாகஸ்தர்களுக்கும் உரிமை உள்ளது. வாதி தரப்பில் எனக்கு கந்தசாமி எழுதி கொடுத்த ஆவணம் வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மேற்படி பூமிகள், தெற்குபுறம் மேடாகவும், வடபுறம் பள்ளமாகவும் உள்ளது என்றால் சரியல்ல. எல்லோருடைய ஒப்புதல் பெற்ற பின்னிட்டு தான் பைப்

லைன் அமைத்தேன் என்றால் ஆமாம். மேற்படி பைப் லைன் 2 ம் பிரதிவாதி பூமிக்கு அடியே உள்ளது என்றால் மாமூல் பொது தடம் மற்றும் வாய்க்கால் வழியாக பதிக்கப்பட்டுள்ளது, அதில் ஒரு பகுதி உட்பிரிவு ஏற்படாததால் அந்த இடத்தில் மட்டும் 2 ம் பிரதிவாதி மற்றும் எனது நிலத்தின் அடியே பைப் லைன் பதித்துள்ளேன். மேற்படி வழக்கு சொத்து மற்றும் பிரதிவாதிகளாகிய எங்களது பைப் லைனில் எத்தனை பாயிண்ட்டுகள் உள்ளது என்றால் வழக்கு சொத்தில் தனியாக 1 பாயிண்ட்டும், எங்களுடைய சொந்த இடத்தில் 3 பாயிண்ட்டுகள் வைத்துள்ளோம்.

6. மாமூல் வழித்தடம் 2 அடி என எந்த ஆவணத்திலும் சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் இல்லை. மாமூல் வழித்தடம் 2 அடி என்பதை காட்ட என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் நேரடியாக இல்லை, மதிப்பு போடப்பட்டுள்ளது. வழித்தடத்திற்கு மதிப்பு போடப்பட மாட்டாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3, 4, 5, ஆகிய ஆவணங்களில் சொத்து விவரம் குறிப்பிடும்போது தென்கோட்டில் மேற்குதாக்கில் கிழமேல் தடத்தில் வடக்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. எதிர் வழக்குரையில் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் மாமூல் தடம், மாமூல் வாய்க்காலின் அளவு 2 அடி என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. நீதிமன்ற ஆணையர் வருவதற்கு முன்பாக வழித்தடத்தை நிரவி கம்பிவேலி அமைத்துள்ளேன் என்றால் வழித்தடமே இல்லை. நீதிமன்ற ஆணையர் ஆய்வின் போது, 2 அடி வழித்தடம் இயற்கை தன்மையில் இருந்ததால் தான் அவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் மேற்படி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது எல்லோருக்கும் பொதுவான தடம், க.ச.எண்.265/1 ஆவணங்களில் செக்குபந்தியாக குறிப்பிடப்பட்டுள்ளது, உபயோகத்தில் உள்ளது, தற்போதும் உள்ளது. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் உள்ளது போல் தான் தற்போது பூமியும், வழித்தடங்களும் உள்ளது என்றால் சாட்சி மீண்டும் முன்கூறிய பொதுவான தடமானது, கிணற்றை ஒட்டி எல்லா பூமிகளுக்கும் வெளியே உள்ள தடமாகும், அது அழிக்கப்படவில்லை, இன்றும் அது பயன்பாட்டில் உள்ளது.

8. நீதிமன்ற ஆணையர் காட்டியுள்ள வரைபடத்தில் உள்ளவாறு ஆவணத்தில் இல்லை என்றால் தவறு. க.ச.எண். 265/1 சம்மமந்தமான அனைத்து ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள வழித்தடமும், நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் உள்ள வழித்தடமும் ஒரே மாதிரியாக தான் உள்ளது என்றால் சரிதான். நான் வேலி அமைப்பதற்கு முன்பாக, சட்டவிரோதமான செயல்கள் நடைபெற்றதாக என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு நிகழ்வு நடந்ததற்கான சூலூர் காவல் நிலையத்தில் யாரையாவது அழைத்து எச்சரிக்கப்பட்டுள்ளதா அல்லது, புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி புகாரை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவை ஏற்படாததால் தாக்கல் செய்யவில்லை. ஆவணம் உள்ளது.

9. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தடத்தை அடைக்க வேண்டி சட்டவிரோதமான செயல்கள் ஏற்பட்டதாக சொல்லி வேலி அமைத்துள்ளேன் என்றால் அவ்வாறு ஒரு தடமே இல்லை. வாதிக்கு அவரது பூமிக்கு செல்ல இந்த ஒரே வழித்தடம் மட்டுமே உள்ளது என்றால் அது தவறு, மூன்று வழித்தடம் உள்ளது. க.ச.எண்.265/1 சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும், வாதி பயன்படுத்த ஒரு வழித்தடம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. வாதி கோரியவாறு நான் வேலியை அகற்ற கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், அதன் படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur